Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 22 வெள்ளிக்கிழமை (05.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :159

# முச்சக்கர வண்டிகள் மீது ஆர்.பி.ஜி. தாக்குதல் நெல்லியடியில் கொடூரம்! 7 பேர் உயிரிழப்பு!!

கரவெட்டி,மே 5

நெல்லியடிப் பகுதியில் நேற்று இடம் பெற்ற படையினரின் தாக்குதலில் இரண்டு ஓட்டோக்களில் பயணித்துக்கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் 7 பேர் உயிரிழந்தனர்.

படையினர் நடத்திய தாக்குதலில் ஓட்டோக்களில் இருந்த 7 பேர் உயிரிழந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நெல்லியடிச் சந்திக்கும் நாவலர் மடம் பகுதிக்கும் இடையில் இந்த அனர்த்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

அப்பகுதியிலுள்ள இராணுவப் புலனாய்வுத் துறையினரின் முகாம் பகுதிலேயே ஓட்டோக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று கூறப்படுகிறது.

இரு ஓட்டோக்கள் மீதும் ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் -

அவற்றில் பயணம் செய்த ஏழு பேர் உயிரிழந்தனர் எனவும் - 'தமிழ் நெற்' இணையத்தளம் தெரிவித்தது.

எனினும் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க, கூறியதாவது:-

"வேகமாகச் சென்ற இரண்டு ஓட்டோக்களைப் படையினர் நிறுத்துமாறு சைகை செய்தனர். ஆனால், அவர்கள் அதனைச் சட்டை செய்யவில்லை. அதற்குப் பதிலாக

(10ஆம் பக்கம் பார்க்க)

# 'உதயன்' படுகொலைகளுக்கு மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்பு!

## வீதிக்கு இறங்காமல் வீடுகளில் தங்கி அமைதிப் போர் நேற்றைய ஹர்த்தாலால் குடாநாடு முடங்கி அடங்கியது

யாழ்ப்பாணம், மே 05

**யாழ்.நகரில் உள்ள 'உதயன்' - 'சஞ்சீவி' நிறுவன வளாகத்திற்குள் செவ்வாய்க்கிழமை முன்னிரவு ஆயுதபாணிகள் புகுந்து மிலேச்சத்தனமான முறையில் மேற்கொண்ட படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.குடாநாடு நேற்று முற்றாக முடங்கி அடங்கியது. மக்கள் வீதிகளுக்கு இறங்காமல் வீடுகளில் தங்கி இருந்து தங்கள் ஒருமித்த எதிர்ப்பை அமைதியான முறையில், உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினர்.**

வீதிகள், சந்தைகள், நகரங்கள் வெறிச்சோடின. பொதுப் போக்குவரத்துகள் முற்றாக நின்றுபோயின. மக்கள் வீதிகளில் நடமாடுவதைத் தவிர்த்து வீடுகளுக்குள் முடங்கினர். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அழைப்பை அடுத்து அனைத்து மக்களும் பூரண ஹர்த்தாலை அனுஷ்டித்தனர். •மிக அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்துச் சேவைகளும் முடங்கின.

அமைதியாக இயங்கிக்கொண்டிருந்த 'உதயன்-சஞ்சீவி' பணிமனைக்குள் நவீன ஆயுதங்களுடன் தங்களை உருமறைத்துக் கொண்டு திடுதிப்பெனப் புகுந்த நபர்கள் 'உதயன்' வளாகம் எங்கும் சகட்டு மேனிக்குச் சுட்டு காட்டுத் தர்பார் புரிந்ததுடன் பணியாளர்கள் இருவரைக் கொடூரமாகக் கொன்றும் கணனிகள் மற்றும் உடைமைகளை சுட்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டம்!

கிளிநொச்சி, மே 05

'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதலைக் கண்டித்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள கிளிநொச்சியில் நேற்று ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பத்திரிகையாளர்களைப் பாதுகாக்குமாறு கோரிக்கைவிடுத்து ஐ.நா. பொதுச் செயலாளருக்கு மகஜர்களையும் கையளித்தனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர் இருவருக்கும் உதயனில் இறுதி மரியாதை

யாழ்ப்பாணம், மே 05

'உதயன்' வளாகத்தினுள் வைத்துக் கொடியவர்களால் கோரமாகக் கொலைசெய்யப்பட்ட உதயன் பணியாளர்கள் இருவருக்கும் இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றுக் காலை உதயன் பணிமனை முன்றலில் நடைபெற்றது.

'உதயன்-சஞ்சீவி' மற்றும் சக நிறுவனங்களின் பணியாளர்களும் பொது அமைப்புக்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எவருக்கும் எங்கும் பாதுகாப்பற்ற அச்ச நிலைமை:

# சிவில் நிர்வாகத்தை முடக்குவதற்கு இன்று முதல் பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மே5

குடாநாட்டில் உருவாகி இருக்கும் அச்சமூட்டும் சூழ்நிலைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி இன்று தொடக்கம் சிவில் நிர்வாகத்தை முடக்கும் வகையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு யாழ்.மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

அச்சமூட்டும் தாக்குதல்கள், கோரக் கொலைகள், கடத்தல்கள், கொள்ளைகள் என்று எங்கும் எவருக்கும் பாதுகாப்பற்ற ஓர் அச்சசூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையை உருவாக்கிய அரசின் சிவில் நிர்வாகப் பணிகளை முடக்குவதன் மூலம் குடாநாட்டு மக்கள் தங்கள் ஒன்று திரண்ட எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும் என்று பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டிருக்கின்றது.

மனிதாபிமான மற்றும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சகல அரச நிர்வாகப் பணிகளையும் இன்றுமுதல் தொடர்ச்சியாகப் புறக்கணிக்குமாறு சம்பந்தப்பட்ட பணியாளர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளது பொது அமைப்புகளின் ஒன்றியம். (ஐ)(22)



உயிரிழந்த உதயன் பணியாளர்கள் இருவரதும் உடல்கள் நேற்று அலுவலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த காட்சி. (மேலும் படங்கள் 08ஆம் பக்கத்தில்)

## உயிரிழந்த 'உதயன்' பணியாளரது குடும்பங்களுக்கு உதவு தொகை

### தேசிய நிதியிலிருந்து வழங்க தலைவர் பிரபா பணிப்பு

யாழ்ப்பாணம், மே5

கொடூரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 'உதயன்' பணியாளர்கள் இருவரது குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் தமிழீழ தேசிய நிதியிலிருந்து உதவு தொகைகளை வழங்குமாறு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பணித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று இத்தகவலை 'உதயன்' ஆசிரியருடன் தொடர்பு கொண்டு தெரிவித்தார்.

உயிரிழந்த இரண்டு பணியாளர்களின் குடும்பங்களுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாவையும் காயமடைந்த இரு பணியாளர்களின் குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாவையும் தமிழீழ தேசிய நிதியில் இருந்து வழங்குமாறு

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கை அரசியல் நிலைமை குறித்து சொல்ஹெய்ம் இந்தியாவுடன் ஆராய்வு

## அமெரிக்கப் பிரதிநிதியுடன் ஓரிரு நாளில் புதுடில்லி செல்வார்

கொழும்பு,மே5

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகள் குறித்து நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் அமெரிக்க இராஜாங்கப் பிரதி அமைச்சர் றிச்சர்ட் பௌச்சர் ஆகியோர் இந்திய இராஜதந்திரிகளுடன் விரிவான பேச்சுகளை நடத்தவுள்ளனர்.

தற்போது நேபாளத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள, இலங்கையின் அமைதி முயற்சிகளுக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சரான எரிக்சொல்ஹெய்மும் ரிச்சர்ட் பௌச்சரும் அங்கிருந்து புறப்பட்டு இன்று அல்லது நாளை இந்தியாவிற்குச் செல்லவுள்ளனர்.

புதுடில்லியில் இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் ஷியாம் சரண், பாதுகாப்புத் துறை ஆலோசகர் எம்.கே.நாராயணன் உட்பட பல உயர்மட்ட அதிகாரிகளையும் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளபோதும் இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்தும் அவை தொடர்பில் இரு தரப்புகளும் மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டி வருவது குறித்தும் இந்தச் சந்திப்புக்களின் போது முக்கியமாக ஆராயப்படவுள்ளன.

வன்முறைகளைக் கட்டுப்படுத்தி இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் விதத்திலான அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது குறித்தும் அங்கு முக்கியமாக ஆலோசிக்கப்படவுள்ளது.

இதேவேளை, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்துப் பேசுவதற்காக அடுத்த வார முற்பகுதியில், இலங்கை சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷியும் புதுடில்லி செல்லவுள்ளார். அவரும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள், தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து இந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவார்.

(ம-க)

## திருகோணமலையில் கிளைமோர் மீட்பு!

திருகோணமலை, மே 05

திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் இருந்து கிளைமோர் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

விமானப் படையினர் இந்தக் குண்டை மீட்டுள்ளனர். வீதிச் சோதனை நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டிருந்தபோது குண்டு கண்டுபிடிக்கப்பட்டது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

காலை வேளையில் ரோந்து செல்லும் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் இலக்கு வைத்து அந்தக் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர் சொன்னார்.

கிளைமோர் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் படையினர் தீவிர விசாரணைகளையும் மேற்கொண்டனர். (ம-க)

### கிரனேட் தாக்குதலை அடுத்து

## வவுனியா நகரில் பொலீஸார் கண்டபடி சூடு; 10பேர் காயம்!

வவுனியா,மே5

வவுனியா நகரில் நேற்று நண்பகல் 12 மணியளவில் பொலீஸார் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பேர் காயமடைந்தனர். இதனால் சுமார் 2 மணிநேரம் நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

வவுனியா பொலீஸ் நிலையத்திற்குச் சமீபமாகக் கடமையில் இருந்த போக்குவரத்துப் பொலீஸார் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் இரு பொலீஸார் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை அடுத்தே பொலிஸார் அப்பகுதியில் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

சனக்கூட்டம் நிறைந்த இடத்தில் நடத்தப்பட்ட இத்தாக்குதலினால் 10 பேர் வரையிலானோர் காயமடைய நேர்ந்தது. அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பொலீஸார் சுடத் தொடங்கியதும் மக்கள் சிதறி ஓடிப் பாதுகாப்பான இடங்களை நாடினர். இதனால் சுமார் 2 மணி நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது. போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம்அடைந்தன. ஏ-9 வீதி ஊடான போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டன. பின்னர் இரு மணி நேரத்தின் பிறகு நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ம-க)

## அரந்தலாவவில் கிளைமோர் ஊர்காவலர்கள் 2 பேர் பலி!

வவுனியா,மே 5

வவுனியா அரவந்தலாவவில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் ஊர்காவல் படைச் சிப்பாய்கள் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

கடமையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய ஊர்காவல் சிப்பாய்களை இலக்கு வைத்து ஒரே நேரத்தில் மூன்று கிளைமோர்கள் வெடிக்க வைக்கப்பட்டன என வன்னிப் பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் டக்ளஸ், புஸ்பகுமார என்ற இரு ஊர்காவல் சிப்பாய்களே உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர்களின் சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டன.

படுகாயமடைந்த ஊர்காவல் சிப்பாய்கள் இருவரும் வவுனியா வைத்தியசாலையில் சிசிக்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதிகளில் இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ம-க)

# 'உதயன்' மீதான தாக்குதலை விசாரிக்க கொழும்பிலிருந்து விசேட பொலிஸ் குழு!

'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்குள் கடந்த செவ்வாயன்று இரவு புகுந்த ஆயுததாரிகள் நடத்திய வெறித்தனமான தாக்குதல் தொடர்பாக கொழும்பிலிருந்து விசேட பொலீஸ் குழு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டு வருகிறது.

உதயன் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் நேரில் வந்த அந்தக் குழுவினர் இங்கிருந்த முக்கியமான தடயங்களைப்பதிவு செய்தனர்.

இதேவேளை -

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த, நன்கு தமிழ்பேசிய ஏழு பேரே மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்டனர் என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் தலா இருவரும் ஒரு மோட்டார் சைக்கிளில் மூவருமாக வந்தவர்களே தாக்குதலை நடத்தினர். அவர்களில் இருவர் தமது மோட்டார் சைக்கிள்களின் முகப்பு ஒளியை ஒளிரவிட்டபடி தயாராக நின்றிருக்க ஏனைய ஐந்து பேரும் மதிலின் மேலாக உள்ளே பாய்ந்து வந்து தாக்குதலை நடத்தியுள்ளனர் எனச் சாட்சிகள் தெரிவித்தனர் என்று குடாநாட்டுக்கான குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவு அதிகாரியான உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் மார்க் தெரிவித்தார்.

''சர்வதேச ஊடகச் சுதந்திர தினத்திற்கு முதல் நாளில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. பத்திரிகையின் பணியை முடக்குவதும் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதுமே இதன் இலக்கு. தாக்குதலாளிகள் ஒரே கல்லில் இரு மாங்காய்கள் அடித்திருக்கிறார்கள்.'' - என்றார் அவர்.

தாக்குதலாளிகளில் ஒருவர் பிஸ்டல் துப்பாக்கியும் மற்றொருவர் ஏ.கே.-47 துப்பாக்கியையும் ஒருவர் எஸ்.எம்.ஜி. எனப்படும் இலகு ரக துப்பாக்கியும் வைத்திருந்தனர் என்றும் -

ஏனைய இருவரும் ரி-56 ரக துப்பாக்கிகளை வைத்திருந்தனர் என்றும் - அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளை விரைவில் கண்டுபிடித்துவிடுவோம் என்றும் அவர் தெரிவித்தார். சம்பவத்தில் பொலீஸாரோ படையினரோ சம்பந்தப்படவில்லை. வேறு ஓர் ஆயுதக் குழுவினரே இதற்குக் காரணமானவர்கள். அவர்கள் விரைவில் அடையாளம் காணப்படுவார்கள் என்றும் கூறினார் அவர்.

நன்றாகத் தமிழ் பேசிய தாக்குதலாளிகள், பின்னர் அரைகுறைச் சிங்களத்தில் பேசியமை இந்தக் குற்றச் செயல் தொடர்பான குற்றச்சாட்டு பொலீஸார் மீதோ படையினர் மீதோ வீழ்ந்துவிடட்டும் என்பதாக இருக்கலாம் என்றும் அவர் சந்தேகம் கிளப்பினார்.

(க)

## அரசுக்கு சங்கடம் ஏற்படுத்துவதே தாக்குதலாளிகளின் நோக்கமாம்!

### ஊடகத்துறை அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு,மே5

''கொழும்பில் சர்வதேச ஊடகவியலாளர் தினம்கொண்டாடப்படும் இந்த வேளையில் ' உதயன்' பத்திரிகை நிறுவனம் மீது நடத்தப்பட்ட தாக்குதல், அரசை தர்ம சங்கடத்தில் ஆழ்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். அரசை சங்கடத்தில் ஆழ்த்துவதே தாக்குதலாளிகளின் நோக்கமாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா.

'உதயன்' மீது கடந்த செவ்வாயன்று இரவு நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினமிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். சம்பந்தப்பட்டோரைக் கைதுசெய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் என்று சர்வதேச ஊடகவியலாளர்களுக்கு நாங்கள் இன்று உறுதி கூறியுள்ளோம்.

சமாதானத்தைக் குழப்ப ஆர்வம் உள்ள ஒருசிலர் இதைச் செய்திருக்கவேண்டும். இத்தாக்குதல் மாலைநேரம் தாண்டி இரவு ஆரம்பித்த பின் நடந்திருக்கிறது. இதையடுத்து யாழ். சிவன்கோவில் சந்திப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர். மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தாம் கொண்டு சென்ற துப்பாக்கியைப் போட்டுவிட்டுத் தப்பிவிட்டனர்.

நாங்கள் பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை - பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருக்கின்றோம். பலமான பாதுகாப்பு இருந்தாலும் ஒரு சிலர் ஊடுருவி வந்து தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பிச்செல்ல இயலாது எனக் கூறமுடியாது- என்றார். (க)

## நெல்லியடி படை முகாம் மீது கிரனேட் வீச்சு!

கரவெட்டி,மே5

நெல்லி யடியில் இராணுவத்தினர் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக எந்தத் தகவலும் தெரியவரவில்லை.

நெல்லியடி பிரதான வீதியில் - சுப்பையா அன்சன்ஸ் கட்டடப் பகுதியில் தங்கியுள்ள இராணுவத்தினர் மீது நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து வீசப்பட்ட இரு கிரனேட்டுக்கள் முகாம் பகுதியில் வீழ்ந்து வெடித்தன எனக் கூறப்பட்டது. எனினும் இந்தத் தாக்குதலால் படையினருக்கு ஏற்பட்ட சேதவிவரம் குறித்து உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில் - இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து நெல்லியடிச் சந்தியூடாகப் பயணித்த பொதுமக்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ம-க)

## தம்புள்ளையில் திடீர் சுற்றிவளைப்பு 47 தமிழர்கள் கைது!

தம்புள்ளை,மே5

தம்புள்ளை பொலீஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பொலீஸார் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலில் 47 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகத்தின் பேரில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் கூறினர்.

சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பொலீஸார் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். தமது ஆள் அடையாளங்களை நிரூபிக்கத் தவறியவர்களே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தம்புள்ளைப் பொலீஸ் நிலையப் பொறுப் பதிகாரி தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் அடங்கியுள்ளனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகத்தை நிவர்த்தி செய்பவர்கள் படிப்படியாக விடுவிக்கப்படுவர் என்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.

(ம-க)

## புலிகள் - கண்காணிப்புக்குழு மன்னாரில் நேற்று சந்திப்பு

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மன்னார் மாவட்ட பிரதித் தலைவருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சந்திப்பொன்று நேற்றுக் பிற்பகல் 11 மணியளவில் கறுக்காகுளத்திலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பின்போது இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மன்னார் மாவட்ட பிரதித் தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மடுக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் அண்மைக்காலமாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் அரசபடை மற்றும் அரச ஒட்டுப்படைகளின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணிகளின் தாக்குதல்கள் மற்றும் அரச படைகளால் பொதுமக்களிற்கு ஏற்படும் பாதிப்புகள், ஊடுருவித் தாக்கும் படையணியால் பொதுமக்கள் கொல்லப்படுவது மற்றும் மடுத்தேவாலயப் புனிதப் பகுதியினை அண்டிய பகுதியில் தாக்குதல்கள் நடைபெறுவது குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் கடந்த திங்களன்று முள்ளிக்குளம் கங்காணிக்குளத்தில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் கொல்லப்பட்டு இருவர் காயமடைந்தமை மற்றும் நேற்று இரவு முசலியில் நடைபெற்ற கைக்குண்டுவீச்சுச் சம்பவங்கள் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினருக்குத் தெளிவுபடுத்திக் கூறப்பட்டது.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# அரசின் கடப்பாட்டை நிறைவு செய்யும் புலிகள்

அண்மைக்காலத்தில் சில யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் தொடர்பாகப் புலிகள் மீது கண்காணிப்புக் குழுவும், இலங்கை அரசும் குற்றம் சுமத்தி வருகின்றன.

அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று - தம் இஷ்டப்படி கிழக்கில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடற்பயணம். மற்றையது - மட்டக்களப்பு, பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லைப் புறத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணி ஊடுருவி, ஒட்டுப்படையினர் மீது அதிரடித் தாக்குதல் நடத்திய சம்பவம்.

இந்த இரண்டுமே யுத்தநிறுத்தத்துக்கு வழி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் யுத்தநிறுத்த மீறல்களே. அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால் ஏன் இந்த யுத்தநிறுத்த மீறல்களைச் செய்வதற்குப் புலிகள் தள்ளப்பட்டார்கள் என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். அதை அறிந்துகொண்டால் இந்த யுத்தநிறுத்த மீறலுக்குப் பின்னால் இருக்கும் நியாயப்பாடும் வெளிப்படும்; நாமும் அதைப் புரிந்தும் கொள்ளலாம்.

யுத்தநிறுத்த உடன்பாட்டை - அதன் விதிகளின் பிரகாரம் - செயற்படுத்தவதில் இலங்கை அரசுத் தரப்பு காட்டிய உதாசீனமும் யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் அரசுத் தரப்பு செயற்பட்டதுமே இந்த இரு யுத்தநிறுத்த மீறல் நடவடிக்கைகளுக்கும் விடுதலைப் புலிகளைத் தூண்டி வழிப்படுத்தின என்பது இங்கு நோக்கற்பாலது.

போர் நிறுத்த உடன்பாட்டின்படி வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - செயற்படும் ஆயுதக் குழுக்கள், ஒட்டுப்படைகள், துணைப்படைகள் போன்றவற்றின் ஆயுதங்கள் களையப்பட்டு அவை வடக்கு - கிழக்கிலிருந்து அகற்றப்படவேண்டும்.

அதைச் செய்யத் தவறிய அரசு, அதற்குப் புறம்பாக தனது படைகளின் புலனாய்வுப் பிரிவுகள் மூலம் தமிழர் தாயகத்தில் ஒட்டுப்படைகளை ஸ்தாபித்து, ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி, வளர்த்து, தமிழரின் விடுதலைப் போராட்ட ஆதரவு சக்திகளுக்கு எதிராக அவற்றை அட்டகாசம் புரியக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது.

இந்த விவகாரம் மஹிந்தர் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரேயொரு முறை நடைபெற்ற ஜெனீவாப் பேச்சுகளின் போது சுட்டிக்காட்டப்பட்டு, அந்தத் தவறைத் திருத்திக்கொள்வதற்கு அரசுத் தரப்புக்கு வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

ஆனால் ஒட்டுப்படைகள், ஆயுதக்குழுக்கள் போன்றவற்றின் ஆயுதங்கள் களையப்படும் என ஜெனீவாப் பேச்சுகளில் உறுதிமொழி அளித்த அரசுத் தரப்பு, அதன் பின்னரும் இதுவிடயத்தில் தனது சதி நாசகாரப் போக்கைக் கைவிடாமல் தொடர்ந்தும் துணைப்படைகளைத் தூண்டி விட்டுத் தனது கைவரிசையைத் தொடர்ந்து காட்டிவந்தது.

இவ்விவகாரத்தில் போர்நிறுத்த உடன்பாட்டின் கீழ் தனக்குள்ள கடப்பாட்டை - பொறுப்பை - அரசுத் தரப்பு நிறைவுசெய்யத் தவறியதோடு அதுக்கு முரணாகவும் செயற்பட்டதால் விடயத்தை தனது சொந்தக் கையில் தானே எடுத்துக்கொண்டு அரசுத் தரப்பின் பொறுப்பையும் தானே நிறைவேற்றவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது விடுதலைப் புலிகள் இயக்கம்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து, ஊடுருவி, அங்கு செயற்படும் ஒட்டுக்குழுக்களின் முகாம்களைத் தகர்த்தெறிந்து, பலரின் உயிரைக் காவுகொள்ளச் செய்து, பலரைக் கைதுசெய்து, பல ஆயுதங்களைக் கைப்பற்றியதன் மூலம், ஒட்டுப்படைகளை இரகசியமாக வைத்திருந்து இயக்கும் அரசுத் தரப்பின் சதி நாசத் திட்டத்தைப் புலிகள் அம்பலப்படுத்தியிருப்பது மட்டுமல்ல, அதன்மூலம் ஆயுதக் களைவு தொடர்பான அரசின் கடப்பாட்டையும் புலிகள் தாமே நிறைவு செய்தும் இருக்கின்றனர்.

யுத்தநிறுத்த உடன்பாட்டின் கீழ் அரசுத் தரப்பு நிறைவு செய்யவேண்டிய கடப்பாட்டை, இந்த நடவடிக்கை மூலம் - அதுவே ஒரு யுத்தநிறுத்த மீறலாயினும் - புலிகள் நிறைவு செய்திருக்கின்றனர்.

இதுபோன்றதுதான் கிழக்குக் கடலில் முல்லைத்தீவு, திருகோணமலை இடையே கடற்பயணத்தை மேற் கொண்ட புலிகளின் நடவடிக்கையும்.

புலிகளின் கிழக்குத் தளபதிகளும் பொறுப்பாளர்களும் வன்னி வந்து திரும்புவதற்காக - வழமையான - ஹெலிக்கொப்டர் வசதியை வழங்குவதற்கு மஹிந்தரின் புதிய அரசு 'பெருமனதோடு' மறுத்தபோது, தமது சொந்தக் கடற்கலங்களில் - கடல் வழியாக - அதைச் மேற்கொள்ளப் போகிறார்கள் என புலிகள் அரசுக்குத் தெரியப்படுத்தினர்.

கடற்படையினரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இவ்வாறு கடற்பயணத்தைப் புலிகள் மேற்கொண்டமை - கண்காணிப்புக் குழுவின் கருத்துப்படி - யுத்தநிறுத்த மீறலாயினும், வழமையான ஏற்பாட்டின்படி ஹெலி வசதி வழங்கும் பொறுப்பை அரசுத் தரப்பு தட்டிக்கழித்து, உதாசீனமாக நடந்துகொண்டதால்தான் இப்படி ஒரு வழிவகையை நாடவேண்டியவர்களானார்கள் புலிகள்.

யுத்தநிறுத்த உடன்பாட்டின் கீழ் தனக்குரிய கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் நிறைவுசெய்யாமல், தட்டிக்கழிப்பதோடு அதற்கு முரணாகவும் நடந்துகொள்ளும் தனது போக்குக்காக இதேபோன்று பல விடயங்களில் புதிய, புதிய படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலை அரசுத் தரப்புக்கு - தென்னிலங்கைக்கு - ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# 'உதயன்' அலுவலக தாக்குதலுக்கு நீதி, சமாதானக்குழு கண்டனம்

யாழ்ப்பாணம், மே.05

'உதயன்' அலுவலக வளாகத்தினுள் ஆயுதபாணிகள் புகுந்து நடத்திய தாக்குதலை யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதிசமாதான ஆணைக் குழு கண்டித்திருக்கிறது.

ஆணைக்குழுவின் தலைவர் வண. பிதா.அ.இ.பேர்ணாட் இது தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.. 'உதயன்' பத்திரிகை வளாகத்தில் நடத்தப்பட்ட கொடூரக் கொலைகள்பற்றி எமது பெரும் வெறுப்பைத் தெரிவித்து இம்மடலை வரைகிறேன். இச் சம்பவத்தில் இரண்டுபேர் உயிரிழந்ததுடன் வேறு சிலர் காயமடைந்தனர். மேலும் கணனிகள் உட்பட அவ்விடத்துத் தளபாடங்கள் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளன.

அனைத்துலக பத்திரிகைச் சுதந்திரத்தின் முதல்நாள் இது நடத்தப்பட்டமை அத்தினத்தின் புனிதத்தை உதாசீனப்படுத்துவதுடன் இலங்கைத் தீவு ஜனநாயக உரிமைகள் மற்றும் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் எவ்வளவுக்கு பாதாளத்தை நோக்கி வீழ்ந்து கொண்டு செல்கிறது என்பது தொடர்பாக சில காத்திரமான கேள்விகளையும் எழுப்புகின்றது.

2000 ஆம் ஆண்டிலே 'துணிகரமான பத்திரிகை' என்ற பரிசுக்கேடயம், இலங்கைப் பத்திரிகையாசிரியர் ஒன்றியத்தினால் 'உதயன்' பத்திரிகைக்கே வழங்கப்பட்டது. மேலும் போர் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த ஆண்டுகளின்போது சில காலத்திற்கு 'உதயன்' பத்திரிகை மாத்திரமே யாழ்.பகுதியில் இயங்கிவந்த பத்திரிகையாகும்.

அப்படியாயின், இந்தப் படுகொலையானது 'உதயன்' பத்திரிகையின் துணிகரமான சேவைக்கு ஒரு பழிவாங்கலா?

தமிழ்மக்களின் கேடான நிலையைப் பற்றி எழுப்பப்படும் குரல்களை மௌனிக்கவைக்கும் நோக்குடன் வேண்டுமென்று உதயனை இலக்குவைத்த செயலா?

குடிமக்களுக்கு எத்தகைய பாதுகாப்பையாவது வழங்கும் ஆற்றலை நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பு கொண்டுள்ளதென்று அதை நம்பியிருக்கலாமா?

இந்த வெறுப்புக்குரிய குற்றத்தை வன்மையாகக் கண்டித்துக்கொள்ளும் இவ்வேளையில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதிக்கூண்டில் நிறுத்துவதற்கும் பத்திரிகைச் சுதந்திரம் உட்படலாக பல அடிப்படை உரிமைகளும் மதிக்கப்படுவதற்கும் மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்படுவதற்கும் துரிதமான பயன்தரு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரி நிற்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# 'உதயன்' மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு அரசு உயர்பட்ச தண்டனை வழங்கவேண்டும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்து

கொழும்பு,மே5

'உதயன்' மீது தாக்குதல் நடத்திய சூத்திரதாரிகளுக்கு அரசு உயர்பட்ச தண்டனை வழங்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

இது விடயமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த செய்திக் குறிப்பில்:-

'உதயன்' - 'சஞ்சீவி' பத்திரிகைகளின் அலுவலகத்திற்குள் நுழைந்து ஆயுததாரிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆயுதபாணிகள் கண்மூடித்தனமாக சரமாரியாக மேற்கொண்ட துப்பாக்கி வேட்டுக்களினால் அங்கு கடமையில் இருந்த முகாமையாளர் உட்பட இருவர் பலியாகி இருவர் படுகாயமும் அடைந்திருக்கும் அதேநேரம் ஆசிரியபீட கணனிகள் உட்பட உபகரணங்களும் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளதை அறிந்து ஊடக சுதந்திரத்தை நேசிக்கும் எமது கட்சி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் ஆயுததாரிகளாக அல்லா நிலையில், ஊடகங்களின் கருத்துக்களை, கருத்துக்களால் எதிர்நோக்கத் திராணியற்றவர்களே இத்தகைய தாக்குதல்களில் ஈடுபட்டுவருகிறார்கள்.

ஏற்கனவே, பல தடவைகள் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் மீதும், அதன் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' பத்திரிகை நிறுவனத்தின் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இவை தொடர்பான கடந்தகால விசாரணை நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பாக அமைந்திருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

தாக்குதல்களுக்குப் பின்னணியில் இருந்தவர்கள் தாக்குதல்களுக்கான தமது கருத்துக்களை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இதற்கு முன்பு நாம் பல தடவைகள் வலியுறுத்தியிருப்பதுபோல ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களும் சுதந்திரமாகச் செயற்படவேண்டுமானால், அவர்களது உயிர், உடைமைகள் பாதுகாக்கப்படுவதோடு, சுயாதீனமாகச் செயற்படுவதற்கான சூழ்நிலைகளும் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் செயற்பட்டுவருகின்றது.

இந்த அடிப்படையில்தான் 'உதயன்' - 'சஞ்சீவி' பத்திரிகை நிறுவனத்தின் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக அரசு பாரபட்சமற்ற முறையிலான நீதி விசாரணைகளை வெளிப்படையாக நடத்தி இச்சம்பவத்துடன் தொடர்புடைய உண்மைக் குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்தி உயர்பட்ச தண்டனைவழங்கவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

இந்தத் தாக்குதலில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதேநேரம், இவர்களுக்குத் தகுந்த நஷ்டஈடு வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறது - என்றுள்ளது.

# 'உதயன்' மீது நடத்தப்பட்ட தாக்குதலை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டிப்பு

திருகோணமலை,மே5

'உதயன்' மீதான தாக்குதலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது விடயமாக சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:-

உதயன் பணிமனை மீதான தாக்குதலையும் அத்தாக்குதலின்போது இரு ஊழியர்கள் கொல்லப்பட்டு, மேலும் சில ஊழியர்கள் காயப்படுத்தப்பட்டுள்ளமையையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்த நாசகாரச் செயலானது, பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றை அழித்தொழித்து ஜனநாயகத்தையும் இல்லாதொழிக்கும் அராஜகச் செயலாகும்.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்கும் பொருட்டு இந்நாசகாரச் செயல்களில் ஈடுபட்டோரைக் கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்தி நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்று - அதில் உள்ளது.

# கற்றல் உபகரணம் அன்பளிப்பு

தென்மராட்சி,மே5

சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களும் -

தரம் ஒன்று, தரம் இரண்டு ஆகிய வகுப்புகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கணனிகளும் அண்மையில் வழங்கப்பட்டன.

அலைன்ஸ் அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினர் இப்பொருள்களை அன்பளிப்பாக வழங்கியதாக பாடசாலை அதிபர் திருமதி ச.தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

(117)

## நாளை

சித்திரை : 23

சனிக்கிழமை

06.05.2006

திதி : நவமி

பின்னிரவு : 04.01

நட்சத்திரம் : ஆயிலியம்

காலை: 7.32

சுபநேரம்: 02.56 - 04.26

ராகுகாலம் : 8.56 - 10.26

# தென்மராட்சியில் மேலும் சில கிராமங்களுக்கு இம்மாத இறுதிக்குள் மின்சாரம் கிடைக்கும்

தென்மராட்சி, மே.05

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் சில கிராமங்கள் இந்த மாதத்தில் மின்சாரம் பெறவுள்ளன.

கச்சாய், தவசிகுளம், மிருசுவில் வடக்கு ஆகிய கிராமங்களே இவ்வாறு மின் விநியோகத்தைப் பெறவுள்ளன. இந்தக் கிராமங்களுக்கு மின்விநியோகம் வழங்குவதற்கான வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன என்றும்

இம்மாத இறுதிக்குள் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை விடத்தற்பளை கிராமத்துக்கான மின்விநியோக வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் -

உயர் அழுத்த மின்விநியோகக் கம்பங்கள் நடும்பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

அவ்வேலைகள் முடிவுற்றதும் மின்விநியோகம் வழங்குவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (117)

## உதயவாக்கு

பிறரிடம் உள்ள அழகு, பணம், அறிவு கண்டு பொறாமைப்படுவது மனநோய்க்கு வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் தகவல் மையமும் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,மே5

'உதயன்' வளாகத்தினுள் நடத்தப்பட்ட தாக்குதலை தமிழ் செய்திதகவல் மையமும் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக அந்த மையம் விடுத்த செய்திக்குறிப்பு வருமாறு:-

'உதயன்' நாளிதழ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலானது கண்டிக்கப்படவேண்டியது. சர்வதேச ஊடக சுதந்திர தினத்திற்கு முதல்நாள் நடைபெற்ற இச்சம்பவம் பத்திரிகையாளர் அனைவருக்கும் ஓர் அச்சுறுத்தலாக அமைகின்றது.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் இருப்பதாகப் பெரிதாகக் கூறப்பட்டாலும், இச்சம்பவமானது அப்பட்டமான சுதந்திர உரிமை மீறலாகும். இனியும் இப்படியான ஒரு சம்பவம் நடைபெறாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இதை ஓர் பத்திரிகைக்கு எதிரான செயல் எனப் பாராது அனைத்து ஊடகங்களும் இந்நேரத்தில் ஒன்றுதிரண்டு போராடவேண்டும். உண்மைகள் வெளிவரவேண்டிய இந்தக் காலகட்டத்தில் உண்மைகளை மழுங்கடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை இதுவாகும்.

இச்செயலை தமிழ் செய்தித் தகவல் மையம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இச்செயலில் சம்பந்தப்பட்டவர்களையும், பின்னணியில் இருந்தவர்களையும் மிக விரைவாக இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஊடக சுதந்திரத்திற்கு பொறுப்பானவர்களைக் கேட்கின்றோம்.

அத்தோடு, இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அஞ்சலியையும், அவர்களது இழப்பால் வருந்துபவர்களுக்கு அனுதாபத்தையும், உதயன் பத்திரிகை சமூகத்தினருக்கு எமது ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது

(க)

# உதயன் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான கோரத் தாண்டவம்

## ஊடகவியலாளர் ஒன்றியங்கள் இணைந்து அறிக்கை

'உதயன்' மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் ஊடக சுதந்திரத்திற்கு எதிரான கோரத் தாண்டவம்.

இவ்வாறு இலங்கையின் பிரபல ஊடகத்துறை அமைப்புக்களான இலங்கை தொழில்சார் பத்திரிகையாளர் சங்கம், ஊடகசேவை தொழில்சார் சங்கங்களின் சம்மேளனம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் இலங்கை முஸ்லீம் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன ஒன்றிணைந்து விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.'

அடையாளம் தெரியாத ஐந்து துப்பாக்கிதாரிகள் சம்பவதினம் இரவு எட்டுமணியளவில் 'உதயன்' பணிமனைக்குள் நுழைந்து அங்கு கடமையில் இருந்த ஊடகத்துறை ஊழியர்கள் இருவரைச் சுட்டுக் கொன்றதுடன் மற்றும் இருவரைச் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர். அத்துடன் நிறுத்திக் கொள்ளாது அங்கிருந்த கணி உபகரணங்களையும் சுட்டு நாசப்படுத்தியுள்ளனர்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நகரத்தின் மத்தியில் இடம்பெற்றுள்ள இந்தத் தாக்குதல் சம்பவம் இந்நாட்டின் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் ஆபத்து நிலைக்கானதொரு உதாரணமாகும்.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் மீதும் கொழும்பிலிருந்து வெளிவரும் உதயனின் சகோதரப்பத்திரிகையான சுடரொளி பத்திரிகை நிறுவனத்தின் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தத் தாக்குதலை முன்னைய இதுபோன்ற தாக்குதல்களின் ஒருஅங்கமாக கருத முடியும்.'

நாம் ஏற்றாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி தமிழ் இன நிலைப்பாட்டைக் கொண்டுள்ள இந்தப் பத்திரிகைகளுக்குச் சுதந்திரமாகக் கருத்து வெளியிடுவதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அந்த உரிமையை மறுக்க முயல்வது கருத்து வெளியிடும் உரிமையை மறுப்பதாக அமைகின்றது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக உரிய பாரபட்சமற்ற விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும், உதயன் பத்திரிகை தனது சேவையை தடையின்றித் தொடரும் வகையில் உரிய பாதுகாப்பு வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோன்று, ஆயுதம் தாங்கிய குழுக்களும் தமது இத்தகைய நடவடிக்கைகள் மூலம் ஊடகவியலாளர்களைப்படுகொலை செய்வதை நிறுத்திக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

-என்று அதில் உள்ளது.

(க)

# இனத்துக்காக உழைப்பவன் 'உதயன்' அவன்மீதான தாக்குதல் கண்டனத்துக்குரியது

## நல்லை ஆதீன முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே5

தமிழினத்தின் நலனுக்காக ஓய்வு இன்றி உழைப்பவன் 'உதயன்' அந்த நிறுவனத்தின் மீதான தாக்குதல் கண்டனத்துக்குரியது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.

'உதயன்' மீதான தாக்குதல் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து நல்லை ஆதீன முதல்வர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்:-

'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்தும், அதில் முகாமையாளர் உட்பட இருவர் பலியாகியும் இருவர் படுகாயமடைந்தமை தொடர்பான செய்தி அறிந்தும் ஆழ்ந்த கவலையடைந்தேன்.

ஜனநாயக நாடொன்றில் மக்களின் கருத்துகள் உரியமுறைப்படி வெளிப்படுத்தப்படவேண்டும். இந்தவகையில், குடாநாட்டு மக்களின் குரலாக - மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் புடம்போட்டுக் காட்டி அவற்றுக்குத் தன்னாலான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க அரும்பாடுபட்டவன் 'உதயன்' இதனை நாடே அறியும். எத்தனையோ நெருக்கடிகளின், மத்தியிலும் தனது பணியைச் செவ்வனே செய்ய வேண்டும் என்பதில் 'உதயன்' கொண்டிருந்த மனஉறுதியை நான் அறிவேன்.

இந்த வகையில், இனத்துக்காக உழைக்கும் பத்திரிகை நிறுவனம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்படவேடண்டியது. இந்தக் கோரத் தாக்குதலின்போது உயிரிழந்த இரண்டு பணியாளர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'உதயன்' மீதான தாக்குதலின்போது உதயனின் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதை நேரில் அவதானித்தேன். மிகப்பாரியளவு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் தனக்குள்ள அனைத்துத் தடைகளையும் தாண்டி 'உதயன்' தொடர்ந்து வெளிவரவேண்டும் - என்று அதில் உள்ளது.

# ஊடகம் மீதான தாக்குதல் நிற்கும்வரை இலங்கைக்கு விமோசனமே கிடையாது!

## முற்போக்கு ஊடகவியலாளர் ஒன்றியம்

சம்மாந்துறை, மே 05

ஊடகத்துறை மீதான தாக்குதல்களுக்கு முடிவு கட்டப்படாதவரை இலங்கைக்கு விமோசனமே கிடையாது.

- இவ்வாறு யாழ். 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீதும், ஊழியர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து இலங்கை முற்போக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலகில் ஊடகவியலாளர்களையும், ஊடக நிறுவனங்களையும் தாக்கியழிக்கும் சம்பவங்கள் அதிகரித்துவரும் நாடாக இலங்கை உள்ளது.

தமது உயிரைத் துச்சமென மதித்து மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

போற்றிப் பாராட்டி தோள்களில் சுமக்க வேண்டிய ஊடகவியலாளர்களைப் போட்டுத் தள்ளிவிடுவதன் மூலம் எதிரிகளால் எதனையும் சாதித்துவிடுவதற்கில்லை.

'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது நடத்தப்பட்ட வெறித்தனத்திற்கும், ஊழியர் கள் மீதான படுகொலைக்கும் காரணமாய் அமைந்தவர்கள் யாராயிருந்தாலும் அவர் கள் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும் - என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-280)

# உதயன் மீதான தாக்குதல் சம்பவத்திற்கு அரசே முழுப் பொறுப்பும் சொல்ல வேண்டும்

## பொது அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, மே 5

உதயன் மீதான தாக்குதல் சம்பவங்களுக்கு அரசே பொறுப்புச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு கோரியுள்ளது யாழ் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம். 'உதயன்' மீதான தாக்குதல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

தமிழ் பேசும் மக்களின் உரிமையின் குரலான - ஜனநாயக விழுமியங்களின் படியாக உள்ளதை உள்ளபடி துணிவுடன் எடுத்துக் கூறி எமது மக்களின் அபிமானத்தைப் பெற்ற நாளோடுகளில் ஒன்றான உதயன் பத்திரிகை மீது அரச பயங்கரவாதத்தின் கொடூர முகம் பதிந்துள்ளது. இது தமிழ் பேசும் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஊடகங்கள் நடுநிலையுடன் உண்மைகளை உண்மையாகத் தோலுரித்துக்காட்டுகின்ற வேளைகளில் அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத தமிழின விரோதிகள் பத்திரிகைத் துறை மீதும், பத்திரிகையாளர் மீதும் கொலைவெறித் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

சுதந்திரமாகச் செயற்படும் ஊடகவியலாளர்களை படுகொலை செய்வதன் மூலம் ஸ்ரீலங்காப் படைகள் இராணுவரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ எதனையும் அடைந்து விட முடியாது என்பதனை வரலாறு சுட்டி நிற்கின்றது.

கடந்த சில காலமாக இராணுவத்தின் இலக்காக உதயன் பத்திரிகை அலுவலகம் இருந்தது. அப்படியிருந்தும் உயிரைச் துச்சமென மதித்து உண்மைச் செய்திகளை உலகிற்குக் காட்டி வந்தது உதயன். இதனைப் பொறுக்க முடியாத சிங்களப் படை உலகமே வெட்கப்படக் கூடிய கேவலமான செயலைப்புரிந்திருக்கின்றது.

- என்று அதில் உள்ளது.

(க)


சீட்டிழுப்பு இல. 1706

03.05.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

23 36 58 70 (12)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201131590 இலிருந்து 201146766

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 41,41,050/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 41,41,050/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 27 | 5,000/- | 1,35,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 404 | 1,000/- | 4,04,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,235 | 500/- | 6,17,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,613 | 40/- | 7,84,520/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,565 | 20/- | 3,71,300/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,78,828 | 10/- | 27,88,280/- |
| மொத்தம் | | | 71,00,600/- |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , சைக்கிள் | 5 | 100,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,18,679 | | 77,00,600/- |

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 48,85,850/-

| | |
|---|---|
| இரத்தினபுரி | 201133030-9-67 |
| அனுராதபுரம் | 201142237-9-34 |
| குருநாகல் | 201140143-8-70 |
| களுத்துறை | 201138762-6-64 |
| ஹம்பாந்தோட்டை | 201133278-5-22 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03



பிருந்தாவன் கல்லூரி

அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட AICTE நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டது. பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது.
2nd Cross, Bhoopasandra,
RMV 2nd Stage, Bangalore 04, India.
தொ.பே: 91-80-23414557/23417833
இணையத்தளம்: www.brindavancollege.com
ஈ.மெயில்: info@brindavancollege.com

Pre University Courses
Science/Maths/Commerce/Comp.Science

Undergraduate Courses
B.C.A. Computer Application
B.B.M. Business Management
B.Sc. Microbiology
B.Sc. Biotechnology
B.Sc. Genetics
B.Sc. Computer Science

Postgraduate Courses
M.Sc. Microbiology
M.Sc. Biotechnology
M.Sc. Applied Genetics
M.C.A. Computer Appln.
M.B.A. Business Admin.

இந்தியாவில் உயர் கல்வி

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்கள்
அல்லது
உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தி எய்தியவர்கள்

கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும் முகாமைத்துவ நம்பிக்கையாளர்களினால்
மே மாதம் 7 ஆம் திகதி
ஞாயிற்றுக்கிழமை
கொழும்பு ஹில்டனில்
(3 ஆம் மாடி - Opal Room)
காலை 10.00 மணி - மாலை 3.00 மணி வரை

மே மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை
இரவு 8.45 மணிக்கு ஐ அலைவரிசையில்
தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்று
இடம்பெறுகிறது.

இவ்வருடமே இணைந்து ... வருடத்தை சேமியுங்கள்

கொம்பனி செக்ரட்டேரியல் சேவிசெஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
... நுகேகொடை.
தொ.பே: 0112854438, 0777317043


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தல் மூலம் மக்களை அடிபணியவைத்து போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்திவிட முடியாது!

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம்,மே5

இராணுவ அராஜகங்கள், அச்சுறுத்தல்கள் மூலம் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருந்து தமிழ் மக்களை அந்நியப்படுத்திவிட இயலாது.

இவ்வாறு ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்குள் ஆயுதபாணிகள் புகுந்து நடத்திய தாக்குதல்கள் உட்பட வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி விவாதித்துள்ளது. இதன் பின்னர் கூட்டமைப்பு சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் விவரம் வருமாறு:-

இன்று தமிழ்த் தேசியத்தின் விடுதலை உணர்வு அசைக்கமுடியாத அளவுக்கு உறுதி பெற்றுள்ளது. இதற்கு தமிழ் தேசியத்தின் அநேகமான ஒவ்வொரு துறைசார்ந்த தமிழ் மக்களின் தியாக உணர்வுடன் கூடிய அர்ப்பணிப்பே காரணமாகும். இத் தகைய புறச்சூழலில்தான் தமிழனத்தின் உரிமைப் போராட்டம் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டமாக பரிணமித்துள்ளது.

தமிழினத்தின் இத்தகைய நிலைப்பாட்டினை நன்குணர்ந்து அதை ஜீரணிக்க முடியாத எதிரிகள் இதனை அழித்தொழிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வந்தாலும் கடந்த 6 மாத காலமாக இத்தகைய நடவடிக்கைகளைத் தீவிரமாக ஈடுபட்டு வருவது வெளிப்படை. இத்தகைய செயற்பாடுகளை இலக்காகக் கொண்டு கடந்த காலங்களில் அரசும் அரசபடைகளும் அதன் துணைப்படைகளும் கல்வித்துறை சார்ந்தவர்கள் தொழில்சார் அமைப்பின் பிரதிநிதிகள், போக்கு வரத்துத்துறைசார் பிரதிநிதிகள், வர்த்தக சமூகத்தைச் சார்ந்தவர்கள் கடற்றொழிலாளர்கள், மாணவர்கள் அரசியல்வாதிகள் தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள், கலைஞர்கள் போன்ற பலதரப்பட்ட துறைசார்ந்த பொது மக்களைக் கொன்றொழித்து இன்று தமிழ் மக்கள்படும் அவலங்களை உலகிற்கு வெளிக்கொண்டு வருவதில் முன்னின்று உழைக்கும் ஊடகவியலாளர்கள், ஊடகத்துறைப் பணியாளர்களை கொன்று தமிழினப் படுகொலைகளை தொடர்ந்து வருகின்றனர்.

இதன் தொடர்சியாக யாழ்.நகரில் உதயன் பத்திரிகை காரியாலயத்திற்குள் மாலை 7.30 மணியளவில் அத்துமீறி நுழைந்த அரசின் துணை ஆயுதப் படை உறுப்பினர் கள் அங்கு கடமையில் இருந்த சகாயதாஸ் சுரேஷ் (சந்தைப்படுத்தல் முகாமையாளர்), இ.ரஞ்சித் விற்பனை மேற்பார்வையாளர் ஆகியோரை சுட்டுக்கொன்றுவிட்டு மேலும் ஐவருக்கு படுகாயங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

தொடரும் இத்தகைய அச்சுறுத்தல் நடவடிக்கைகள் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் இருந்து தமிழ் மக்களை அந்நியப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தாலும் இந்த நோக்கம் ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக் காட்ட விரும்புகின்றது. மேலும் இதற்கு மாறாக இத்தகைய அச்சுறுத்தல் நடவடிக்கைகள் தமிழ்மக்களின் மத்தியில் விடுதலை உணர்வினை மேலும் வலுப்படுத்துவதாகவே அமையும். அரச நிர்வாகத்தினதும் அரச படைகளினதும், அதன் துணைப் படைகளினதும் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் தேசத்தை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஒருமுறை நிரூபிப்பதற்காகவே அமைகிறது. இதன் காரணமாக தமிழ் மக்கள் அரச நிர்வாகம், அரச படைகள் ஆகியன தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்ற நம்பிக்கையை முற்றாக இழந்து தமிழினத்தின் பாதுகாப்பை உறுதிசெய்ய அரச படைகளும் துணைப் படைகளும் வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேறுவதே ஒரே தீர்வாகும் என்ற நிலைப்பாட்டிற்கே வந்துள்ளார்கள்.

தமிழ் ஊடகத்துறைமீது நடத்தப்பட்டிருக்கும் இந்த கோழைத்தனமான - காட்டுமிராண்டித்தனமான - தாக்குதலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

அதேவேளை - இச்சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு காயமடைந்தவர்கள் கூடிய விரைவில் நலமடைய பிரார்த்திக்கின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 'உதயன்' மீதான ஆயுததாரிகளின் தாக்குதல் ஊடக சுதந்திரம் மீது தீர்க்கப்பட்ட வேட்டு!

## புதிய ஜனநாயகக் கட்சி பலத்த கண்டனம்

கொழும்பு,மே5

'உதயன்' மீதான ஆயுததாரிகளின் தாக்குதல், ஜனநாயகம், ஊடக சுதந்திரம், மனித உரிமை என்பவற்றின் மீது தீர்க்கப்பட்ட வேட்டுகளாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது புதிய ஜனநாயகக் கட்சி

'உதயன்' மீதான தாக்குதல் சம்பவம் குறித்து மேற்படி கட்சி விடுத்துள்ள அறிக்கையில்:-

'உதயன்' பத்திரிகைப் பணிமனைக்குள் புகுந்து ஆயுததாரிகள் நடத்திய திட்டமிட்ட துப்பாக்கிச் சூட்டில் சிக்கி அங்கு பணியில் ஈடுபட்டிருந்த இருவர் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அத்துடன், பத்திரிகைக்குரிய கணனிகளும் ஏனைய உபகரணங்களும் துப்பாக்கிச் சூட்டினால் அழிக்கப்பட்டுள்ளன. ஆயுததாரிகள் கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலை எமது புதிய ஜனநாயகக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேவேளை, அதன் பின்னணியும் சூத்திரதாரிகளும் உரியவாறு கண்டறியப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை அரசு உறுதியான வழிகளில் முன்னெடுக்கவேண்டும்.

இன ஒடுக்குமுறை காரணமாக இன்று வடக்கு-கிழக்கில் நிழல் யுத்தம் நடந்து வருகின்றது. இதனால், நாளாந்தம் மனிதப் படுகொலைகள் கொடூரமாக இடம்பெற்று வருகின்றன. பல தரப்பினராலும் மேற்கொள்ளப்படும் மிலேச்சத்தனமான இந்தக் கொலைகளின் மத்தியிலேயே ஊடகவியலாளர்களும் கொல்லப்படுகின்றனர். ஊடகப் பணிமனைகள் குறிவைத்துத் தாக்கப்படுகின்றன.

முன்பு கொழும்பில் உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' பணிமனை தாக்கப்பட்டது. அதன் பாதுகாப்பு ஊழியர் கொல்லப்பட்டார். இப்போது உதயன் பணிமனை தாக்கப்பட்டு படுகொலைகளும் இடம் பெற்றுள்ளன.

பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் மீதான இவ்வகையான தாக்குதல்கள் ஊடக சுதந்திரத்தின் மீதானவை மட்டுமன்றி ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் குழிதோண்டிப் புதைக்க முற்பட்டுள்ள பாசிச முனைப்பின் வெளிப்பாடுகளுமாகும்.

கொழும்பில் சர்வதேச சுதந்திர ஊடக மாநாடும் விருதுவழங்கல்களும் இடம்பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை மீதான ஆயுததாரிகளின் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. இச்சம்பவம் அபாய அறிவிப்போ என்றே அச்சம் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, ஜனாதிபதியும் அரசும் இந்தச் சம்பவத்தை பத்தோடு பதினொன்றாகச் சேர்த்துக்கொள்ளாது உறுதியான உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என எமது புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது - என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# 'உதயன்' அலுவலகத்தில் நடந்த கொடூர தாக்குதல் சர்வதேச ஊடக சுதந்திரத்துக்குப் பெரும் சவால்!

## இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கண்டனம்

கொழும்பு,மே5

'உதயன்' பத்திரிகை அலுவலகத்தில் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் சர்வதேச ஊடக சுதந்திரத்துக்கே பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இவ்வாறு ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தமிழ்ப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

'உதயன்' பத்திரிகை நிறுவனம் மீது 02.05.2006 புதன் மாலையில் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டதையிட்டு நாம் மிகுந்த மனவருத்தம் அடைந்துள்ளோம். இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தொடர்ச்சியாக தமிழ்ப் பத்திரிகைத் துறைக்கு சவால்விடுக்கும் வகையில் நடத்தப்பட்டு வரும் தாக்குதல் வரிசையில் இத் தாக்குதலும் இடம்பெற்றிருக்கிறது.

சர்வதேச ஊடக சுதந்திர தின நிகழ்வுகள் கொழும்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் தங்கள் பத்திரிகை நிறுவனம் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல் சர்வதேச ஊடக சுதந்திரத்திற்கே பெரும் சவால் விடுவதாக அமைவதையே நாம் காண்கின்றோம். எனவே இது போன்ற நிகழ்வுகள் பொறுப்புவாய்ந்தவர்களால் கண்டிக்கப்பட்டால் மட்டும் போதாது. இனியும் இதுபோன்ற மிலேச்சத்தனமான நிகழ்வுகள் நடைபெறாது என்பதற்கு போதிய உத்தரவாதம் வழங்கப்படவேண்டும்.

இந்தத் தாக்குதல் மூலம் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கொலையாளிகளை அரசு பாதுகாத்துக்கொண்டு தாக்குதலைக் கண்டித்திருப்பது கேலிக்கிடமானது!

## கஜேந்திரன் எம்.பி.அறிக்கை

'உதயன்' மீது தாக்குதல் நடத்தியவர்களை அரசு தானே பாதுகாத்து வைத்துக்கொண்டு தாக்குதலைக் கண்டிப்பது கேலிக்கிடமானது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்.

அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த பல வருடங்களாக தமிழ் மக்களுக்கெதிராக சிங்கள, பௌத்த, பேரினவாத அரசுகளினாலும், அதன் அயுதப் படைகளாலும் அவர்களது பாதுகாப்புடனும், ஆதரவுடனும் இயங்கும் துணை ஆயுதக்குழுக்களினாலும், பொருளாதார ரீதியாகவும், அரசியல், இராணுவ ரீதியாகவும், இழைக்கப்பட்டுவரும் அநீதிகளை உடனுக்குடன், துணிச்சலுடனும், நேர்மையுடனும் வெளிக்கொணர்பவர்கள தமிழ் ஊடகவியலாளர்களும், பத்திரிகையாளர்களும் மட்டுமே.

ஆனால், சிங்கள, ஆங்கில ஊடகங்கள் முற்றுமுழுதாக அரசின் ஊதுகுழல்களாக இருந்து தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை மூடிமறைத்து வருகின்ற அதேவேளை, மேலும் மேலும் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு தூபமிடுபவைகளாகவும் இருந்து வருகின்றன.

இலங்கை அரசும், அதன் ஊடகத்துறை சார்ந்த அமைச்சும் கூட தமிழர் ஊடகவியலாளர்கள் மீதும், பத்திரிகையாளர்கள், பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் அதன் ஊழியர்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்கள், கொலைகள், மிரட்டல்கள் போன்றவற்றினை கட்டுப்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன், மாமனிதர் டி. சிவராம், மயில்வாகனம் நிமலராஜன், சு.சுகிர்தராஜன் ஆகியோர் ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினரின் முழுமையான வழிகாட்டலுடன் தமிழ் துணை ஆயுதக் குழுக்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பதுடன் அக்கொலைகள் தொடர்பான விசாரணைகள் [illegible] மையும், குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில் 'உதயன்' பத்திரிகை நிறுவனம் தமிழ்த் தேசியத்தினை வளர்த்தெடுப்பதிலும், தமிழ் மக்கள் மீதான ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதத்தின் மனித உரிமை மீறல்களை சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்துவதிலும், தமிழ் இனத்தை விற்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை பேரினவாதத்துக்கு காட்டிக்கொடுத்து வயிற்றுப்பிழைப்பு நடத்திவரும் ஈ.பி.டி.பி. உள்ளிட்ட தேசத்துரோக சக்திகளை மக்கள் முன் அம்பலப்படுத்துவதிலும் துணிச்சலோடு செயற்படுவதில் தமக்கென ஓர் தனியிடத்தினை உருவாக்கிக் கொண்டுள்ளது.

இதன் காரணமாக அந்த நிறுவனம் ஸ்ரீலங்கா வான்படை தாக்குதலுக்கு இலக்கானதுடன், அதன் ஆசிரியரை கொலை செய்வதற்கு ஈ.பி.டி.பியினர் பலதடவைகள் முயன்றுள்ளனர்.

அதேவேளை, 'சுடர் ஒளி' நிறுவனத்தின் மீது சில மாதங்களுக்கு முன்னர் குண்டுத் தாக்கதல் நடத்தப்பட்டு ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டார். '

அடக்குமுறையின் உச்சகட்டமாக 'உதயன்' அலுவலகத்தினுள் புகுந்து இருவரைப் படுகொலை செய்து மூவரைக் காயப்படுத்தி பலலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளை அழித்த சம்பவம் அமைந்துள்ளது.

இக்கொடூரச்செயலைப் புரிந்தவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையேந்தி வயிற்றுப்பிழைப்பு நடத்திவரும், ஸ்ரீ லங்கா இராணுவத்தின் துணை ஆயுதக் குழுவாக இயங்கும் ஈ.பி.டி.பி.யினரே ஆவர்.

கொலையாளிகளை சிறீதர் தியேட்டரினுள் தங்கவைத்து இராணுவம் பாதுகாப்பு வழங்கிக்கொண்டு ஜனாதிபதியும், ஊடக அமைச்சரும் கூறும் கருத்துகள் கேலிக்கிடமானவையாக உள்ளன.

இது அரச பயங்கரவாதத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடாக அமைந்துள்ளது. இதனால் தமிழ் ஊடகவியலாளர்களும், பத்திரிகையாளர்களும், பத்திரிகை நிறுவனப் பணியாளர்களும் மரணப் பொறிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக தமிழ் ஊடகவியலாளர் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு கொலைகளைப் புரிந்துவரும் அரசு பத்திரிகையாளர்களைக் கேவலமாக நடத்துவதில் உலகில் முன்னணி வகிக்கிறது.

இதனைக் கட்டுப்படுத்தி பத்திரிகைத் துறையின் சுதந்திரத்தினை நிலைநிறுத்த சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்று தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 Original Prima Broilar குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 08.05.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடி கிளைகளிலும், கரன் ஆலடி, உடுவில், சந்நிதிபாம் தொண்டைமானாறு, முருகன், சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர், ஒழுங்கை முத்திரைச்சந்தை யடி, நல்லூர். (சி- 49187)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

## கைதடி தெற்கு குடியிருப்பாளர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம்

தென்மராட்சி, மே5

கைதடி தெற்கு ஊரியான்காடு குடியேற்றத் திட்ட குடியிருப்பாளர்களுக்கு சுவர்ணபூமி காணி அளிப்புத் திட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் (பெர்மிட்) அண்மையில் வழங்கப்பட்டது. கைதடி தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனால் குடியிருப்பாளர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

கிராம அலுவலர் எஸ்.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலக காணி அலுவலர் சி.சிவசுப்பிரமணியம், வெளிக்கள போதனாசிரியர் எஸ். நவராசா உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர். (117)

## முகாமைத்துவ மீள்பரீட்சை

யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக்கற்கைகள் வணிக பீடத்தின் பகுதி -I வருடம் BAd/B.Com மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு மீள்பரீட்சைகள் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களுக்கு தொலைபேசி இல 0212223610 என்ற இலக்கத்துடனோ அல்லது பீடாதிபதி அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நன்றி நவில்கின்றோம்



அமரர்
## சுப்பிரமணியம் செல்வரஞ்சன்

பிறப்பு 21-08-1960 இறப்பு 22-03-2006

2006.03.22 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் இல்லத் தலைவர் சு. செல்வரஞ்சனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், அஞ்சலிச் செய்திகள் அனுப்பியவர்கள், அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்கள், விபத்து நடந்தவுடன் மருத்துவமனைக்கு வந்து உதவி செய்தவர்கள் எனப் பல்வேறு வகையில் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

துக்கச் சுமை காரணமாகத் துயரில் பங்குகொண்ட சிலருக்கு தனிப்பட்ட வீட்டுக்கிருத்திய அழைப்புகளை அனுப்பத் தவறிவிட்டோம். இதற்காக மன்னிப்புக் கேட்பதுடன், இன்று(2006.05.05) வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெறும். அன்னாரது வீட்டுக்கிருத்தியச் சடங்குகளில் கலந்துகொள்வதுடன் நண்பகல் நடைபெறும் விருந்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாக்கியவாசா இல்லம்,
இந்துக்கல்லூரி ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.
(50005)

# மரண அறிவித்தல்

## திருமதி அன்றா பேரின்பநாயகம் புஸ்பநாயகி



பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்றா பேரின்பநாயகம் புஷ்பநாயகி 02.05.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்றா பேரின்பநாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சவுந்தரநாயகத்தின் அன்பு மகளும் அன்று செல்வக்குமார் (கனடா) அவர்களின் அருமைத் தாயும் ஜெறினின் (கனடா) அன்பு மாமியும் மகிமைநாயகி, செபறட்ணம், காலஞ்சென்ற ஜெயரட்ணம், ரட்ணா சவுந்தரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் எட்றியன், ஷறன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கடங்குகள் நாளை (06.05.2006) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இளவாலை கத்தோலிக்க சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திமா இல்லம்,
பத்தாவத்தை,
இளவாலை.
(50006)

தகவல்:
அன்றா செல்வகுமார்
(மகன்).

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

## க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்கான அனுமதி பிரிவு - 2008

கணித, விஞ்ஞான, வர்த்தக, கலை வகுப்புகளில் அனுமதிபெற விரும்பும் மாணவர்கள் பாடசாலை நேரத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து 08.05.2006இற்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வி.மாணிக்கம் அதிபர்.
(சி/49393)

# கண்ணீர் அஞ்சலி

எமது தமிழ் ஆசான் வா.சிவராசா
அவர்களின் அன்புத் தந்தை

## கணபதிப்பிள்ளை வாரித்தம்பி

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.
ராஜா கல்வி நிலையம், கொக்குவில்.
(50004)

நீங்காத நினைவலைகளுடன்
31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 22 * 07 * 1955



உதிர்வு 05 * 04 * 2006

## அமரர் வீரசிங்கம் பொன்னுத்துரை

(உரிமையாளர் EN 5015)

அன்போடு எமையெல்லாம்
அரவணைத்துக் காத்த எம் தெய்வமே!
ஆறாத்துயரில் எம்மை மூழ்கவிட்டு அவசரமாய்
ஆண்டவன் அழைத்துக் கொண்டதேவோ....?
இன்றுடன் உமை இழந்து முப்பத்தொரு தினமா?
இன்னும் விழிகளின் ஈரம் காயவில்லையே....?
ஏழேழு ஜென்மம் - ஆனாலும்,
ஈரவிழிகளில் உம் முகமே என்றும்......!

இன்று (05.05.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தம்பாட்டி,
ஊர்காவற்றுறை.
(50000)

தனசீலன் எழிலரசி
(மருமகன், மகள்)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

6ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் வீரகத்தி குலஆனந்தன்
(முன்னாள் வட பிராந்திய போக்குவரத்து சபை திடீர் பரிசோதனைக்குழு அதிகாரி)

மலர்வு 17.10.1954 உதிர்வு 16.04.2005

திருமதி குலஆனந்தன் யோகேஸ்வரி
(இராசாத்தி)

மலர்வு 12.06.1957 உதிர்வு 06.11.2000

பூரணானந்த முத்திகா நாகபூசனியே
திதி - சித்திரை பூர்வபக்க அட்டமி

கற்றவர்க் கினியர் நயினையம் பதிவாழ் காரணிதாரணன் தங்காய்
மற்றவ ரறியா மரகத வரையின் வாமமே வளர்பசுங் கொடியே
நற்றவ நிலையின் ரேயெனை இருந்த நாதநாதாந்தமும் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்திகா நாகபூசணியே
நயினைச்சித்தர்

எம்மைத் தந்த தெய்வங்களே அப்பா அம்மா, உங்கள் ஆன்மா நயினைச் சித்தர் சொன்னவாறு முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்திப்பேறுடைய எம் பிராட்டியாம் நாகபூசணி தாயின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

30/4, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்துரை பாக்கியம்



புலோப்பளை, பளையை நிரந்தர முகவரியாகவும் 159, மானிப்பாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாக்கியம் நேற்று (04.05.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரையின் அன்பு மனைவியும் பத்மாவதி (கனடா), இராமலிங்கம் (கோட்டக்கல்வி அதிகாரி, பளை), கமலாம்பிகை (புலோப்பளை), அரிய தேவி (கனடா), பாலசுந்தரம் (கிராம அலுவலர், பளை), விமலாதேவி (திரு வையாறு), அன்னலட்சுமி (இரத்தினபுரம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும் அழகரத்தினம் (கனடா), இராசினி (கிராம அலுவலர் - புலோப்பளை), கந்தசாமி (புலோப்பளை), பரமசாமி (கனடா), பவளராணி (யாழ்ப்பாணம்), பத்மநாதன் (திவையாறு), தர்மலிங்கம் (காந்தி - இரத்தினபுரம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயக் குமார் (கனடா), உதயகுமார் (கனடா), ஜெயரஞ்சினி (கொழும்பு), றஜேன் (லண்டன்), நிசான் (மருத்துவக் கல்லூரி, சீனா), சசிகரன் (கனடா), சசிகலா (புலோப்பளை), சசிதரன் (கனடா), பாஸ்கரன் (கனடா), விமலறஞ்சன் (மீசாலை), விமலறஞ்சி (கச்சாய்), விமலரூபன் (மீசாலை), விமலதர்சினி (புலோப்பளை), கோகிலநாத் (IIS City Campus மாணவன்), துஷா (மாணவி - சுண்டுக்குளி, மகளிர் கல்லூரி), மேகலநாத் (மாணவன் - சென். ஜோன்ஸ் கல்லூரி), சர்மிளா (லண்டன்), விஜுகா (பிரான்ஸ்), பாமிலா (நில அளவை யியல் மாணவி - கொழும்பு), பிரசாத் (மாணவன் - கிளி/மத்திய கல்லூரி), துஷ்யந்தினி (இரத்தினபுரம், கிளிநொச்சி), சாந்தி (கனடா), பிறேமசுதா (கனடா), யோகநாதன் (செயலகம், கொழும்பு), குணபாலசிங்கம் (அதிபர், பளை மத்திய கல்லூரி), சீதா (கனடா), பந்துஷா (கனடா), தயாநிதி (மீசாலை), சீறிஸ்கந்தராசா (கச்சாய்), பரிசா (மீசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லக்சன், லதுஷன்,வினோசா, தர்சினி, கஜன், குகவதனன், நரேந்திரன், சிசானினி, றவிக்கா, சிலக்ஷா, லதுசன், கனிசன், தனுசன், உசாந்தினி, ஜெயந்தினி, தனுஷா, நிதர்சனா, குகபாலன், மதுசன் ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2006) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

159, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5143
(50004)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.
மகன் - சி.இராமலிங்கம்
(கோட்டக்கல்வி அதிகாரி, பளை),
மகன் - சி.பாலசுந்தரம் (கிராம அலுவலர், பளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘உதயன்’ மீதான தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சியில் பேரணி





பேரணியில்...




மகஜர்கள் கையளிப்பு


பத்மினி எம்.பி.

# மீனவர்களை பீதியுடன் கரை திரும்பவைத்த கடற்படையினரின் திடீர் பீரங்கிவேட்டுகள்

## வடமராட்சிக் கடலில் நேற்றுச் சம்பவம்

கரவெட்டி,மே5

கடற்படையினர் திடீரென பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்ததையடுத்து தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் பீதியடைந்து விரைவாக் கரைக்குத் திரும்பினர்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் வடமராட்சிக் கடலில் இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்தபோதும், மீண்டும் காங்கேசன்துறை நோக்கி ரோந்து சென்றபோதும் கடற்படையினர் பீரங்கிவேட்டுக்களைத் தீர்த்தவாறு பயணம் செய்தனர் என்றும் -

இதனால், பீதியடைந்த மீனவர்கள் தொழில் செய்வதைக் கைவிட்டுக் கரைக்குத் திரும்பினர் என்றும் - கூறப்படுகின்றது.

கடற்படையினர் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தமைக்கான காரணத்தை உடனடியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

(70)

## தொழில்நுட்பவியலாளர் பதவி உயர்வுப் பரீட்சை ஒத்திவைப்பு

அச்சுவேலி,மே5

இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவை தரம் Iஇல் உள்ளவர்களை அதிவிசேட தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறமாட்டாது என்று பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(11-190)

# பூதவுடல்களைத் தகனம் செய்வதற்கு இடமின்றி மாதகல் மக்கள் பெரும் சிரமம்

வலி.தென்மேற்கு, மே.5

மாதகல் பகுதியிலுள்ள இந்து சமய மக்கள் இறந்தவர்களின் பூதவுடல்களைத் தகனஞ்செய்வதற்கு பொருத்தமான -வசதியானதொரு இடத்தைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்கள்ள எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இதுவரை காலமும் தகனம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த மாதகல் குசுமன்துறை கடற்கரைக்கு சமீபமாகவுள்ள இந்து மயானத்தில் பூதவுடல்களைத் தகனம்செய்வதற்கு கடற்படையினர் தடைவிதித்திருந்தமை தெரிந்ததே.

இதனையடுத்து தூர இடங்களிலுள்ள மாரீசன்கூடல் இந்துமயானம் மற்றும் சம்வில்துறை பகுதியிலுள்ள தற்காலிக இந்து மயானம் ஆகியவற்றுக்கு இறந்தவர்களின் பூதவுடல்களை எடுத்துச்சென்று தகனஞ் செய்து வருகின்றனர்.

இதனால், பல்வேறு அசௌகரியங்களை இங்குள்ள பொதுமக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

இதுபற்றி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் இதுபற்றி பிரஸ்தாபித்திருந்தனர். அத்துடன் வலிதென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மாதகல் இந்துசமய விருத்திச் சங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதுபற்றி மகஜர்களை அனுப்பி வைத்திருந்தது. ஆனால், இதுவரை பொருத்தமான - வசதியான இடம் எதுவும் தகனஞ் செய்வதற்கு கிடைக்கவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஒருவர் இறக்கும் பட்சத்தில் பூதவுடலை எங்கு கொண்டுபோய் தகனம்செய்வது என்று திண்டாடும் நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளனர் என இங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியிலுள்ள பொதுநல அமைப்புகள் ஒன்றுசேர்ந்து இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

(135)







‘உதயன்’ மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்த ஹர்த்தாலின்போது யாழ். நகரப்பகுதி வீதிகள் ஆள் அரவம் எதுவுமின்றி வெறிச்சோடிக்கிடப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனில் நடந்த அஞ்சலி நிகழ்வுக் காட்சிகள்...



தோழனைச் சுமக்கும் தோழர்கள்....



சந்தைப்படுத்தல் முகாமையாளர் சுரேஷின் பூதவுடல்...



விநியோக மேற்பார்வையாளர் ரஞ்சித்தின் பூதவுடல்...



நிர்வாக இயக்குநரின் இறுதி அஞ்சலி...



ஆசிரியர் அஞ்சலி செலுத்திய போது...



உறவுகள் மாலை அணிவித்த காட்சிகள்...



அஞ்சலி உரையாற்றுகிறார் எம்.கே. சிவாஜிலிங்கம்...









அமைப்புகள் சார்பில் அஞ்சலி உரைகளை நிகழ்த்தியோர்...



நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதயன் பத்திரிகை மீதான

# தாக்குதலாளிகளைக் கைதுசெய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு,மே5

யாழ். நகரில் அமைந்துள்ள 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதலை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட ஆயுததாரிகளை உடன் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை அரச கூடியவிரைவில் எடுக்க வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர்மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதவது:-

தமிழ் மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒரு களமான 'உதயன்' பத்திரிகை மீது தாக்குதல் நடத்தியமை சுதந்திரமாக வாழும் மக்கள், பெரும்பான்மையாக மதிக்கக்கூடிய கொள்கைகளை அழித்தொழிக்கும் - நசுக்கும் - இழிவுபடுத்தும் செயற்பாடாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்நிலைமை தொடருமானால் நாடு மோசமான நிலைமையை நோக்கி செல்லும் அத்தோடு இவ்வாறு காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் ஈடுபட்ட தரப்பினரை உடனடியாகக் கைது செய்வதற்கான விசாரணைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அவிஸாவளைப் பொலீஸ் பகுதியில் மர்ம முறையில் கொல்லப்பட்டவர்களின் ஐந்து தலையற்ற முண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. விசாரணைகள் ஆரம்பித்து ஓரிரு வாரங்கள் கழிந்துள்ள போதும் இன்னும் ஐந்து முண்டங்களும் இனங் காணப்படவில்லை.

இந்தச் சம்பவத்தினால் மக்கள் பெரும் அச்சத்துக்குள்ளாகியிருக்கின்றனர். ஏன் இதனை செய்கிறார்கள்; யார் இதனைச்செய்வார்கள்? இது தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகிறதா? என மக்கள், வெளிப்படுத்த முடியாமல் தமது மனதினுள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஆகவே, இது தொடர்பாகவும் அரசு கூடிய கவனமெடுத்து உரிய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது புல் முளைத்த அநீதியான சட்ட ஒழுங்கே காணப்பட்டது. காணப்படுகிறது என ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ஆனால், தற்போது அவரே சட்ட விதிகளை மீறி சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்து வருகிறார்.

அத்தோடு நாட்டில் வன்முறைச் சம்பவங்கள், கொலை, திருட்டு ஆகியன மேலோங்கியிருக்கும் இவ்வேளை இச்சம்பவங்களோடு தொடர்பானவர்களை சட்டத்தைப் பயன்படுத்தி ஏன் இன்னும் ஜனாதிபதி மஹிந்த கைது செய்யவில்லை?

அத்துடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமாதானப் பேச்சு தொடர்பாக சர்வதேச ஊடகங்களுக்கு ஒரு மாதிரியாகவும் உள்நாட்டு ஊடகங்களுக்கு ஒருவிதமாகவும் தெரிவித்து வருகிறார். இவற்றை யெல்லாம் விடுத்து சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் வழியை ஜனாதிபதி ஏற்படுத்த வேண்டும்.

மக்களின் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. பஸ் கட்டணம், ஓட்டோ கட்டணம், பொருட்கள் விலை ஆகியன அதிகரித்துள்ளமையினால் மக்கள் இன்னல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளையும் இன்னும் அரசு நிறைவேற்றவில்லை. இவ்வாறெல்லாம் நிலுவை வைத்துக்கொண்டு மேலும் அவர்களுக்குச் சுமையை வழங்குவது கொடூர தன்மையாகும். - என்றார்.

(க)

# வன்செயல்களை நிறுத்திவிட்டு பேச்சுக்கு உடனே விரையுங்கள்

### சம்பந்தப்பட்டோரிடம் யாழ். ஆயர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே.05

வன்செயல்களை உடனடியாக நிறுத்திவிட்டு பேச்சுக்கு விரையும்படி சம்பந்தப்பட்ட தரப்புகளை கேட்டுக்கொண்டுள்ளார் யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை.

நேற்றிரவு இது குறித்து அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது-

யாழ்.நகரில் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடைபெற்றுவரும் கொலைகளின் உச்சமாக உதயன் பத்திரிகைக் காரியாலயத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். தொடரும் இக்கொலைகளால் மக்கள் அதிர்ச்சியிலும் அச்சத்திலும்உறைந்து போயுள்ளனர். நிலைமையைக் கட்டுப்படுத்த யாருமே பொறுப்பு எடுக்காத நிலையில் கொலைகள் தொடர்வது மிகுந்த வேதனை தருகிறது.

போர் நடக்கும் காலத்தில் இருந்த பயத்தையும் பீதியையும் விட அதிக பயத்திலும் பீதியிலும் மக்கள் இன்று இருக்கின்றார்கள். சமாதான காலத்தில் இது போன்ற கொலைகளை நாம் அனுமதிக்கவே முடியாது. இராணுவத்தினர் மீதும் பொதுமக்கள் மீதும் நடத்தப்படும் இத்தாக்குதல்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிரானவை . இராணுவக் கெடுபிடிகள் ஒருபுறம்; பயங்கரக் கொலைகள் மறுபுறம் எனத் தொடரும் இந்த வன்செயல்களை உடன்நிறுத்துங்கள். பேச்சு வார்த்தைக்கு உடன் விரையுங்கள் என சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தமிழ் மக்கள் பெயரால் அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம். இவ்வாறு ஆயர் தெரிவித்துள்ளார்.

## கண்டியில் மூவர் கைது

கண்டி, மே5

கண்டி ஹந்தானை என்னுமிடத்தில் பொலீஸார் நடத்திய திடீர்த் தேடுதல் நடவடிக்கையின்போது பெரலீஸார் தொண்டமனாறுப் பகுதியைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்களையும், யுவதி ஒருவரையும் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகத்தின் பேரில் கைதான இவர்களின் அடையாள அட்டைகள் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தங்கராசா நேசன், வீ.விஜயகுமார், தங்கராசநாயகி ஆகிய மூவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களாவர். கடந்த முதலாம் திகதி இந்தக் கைதுகள் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# பத்திரிகைச் சுதந்திரத்துக்கு எதிரான கொடூரச் செயல்!

### 'உதயன்' தாக்குதலுக்கு 'லங்காதீப' கண்டனம்

**'லங்காதீப' சிங்கள நாளிதழ் நேற்றைய தனது ஆசிரியர் தலையங்கத்தில் 'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்திருக்கிறது. அந்த ஆசிரியர் தலையங்கத்தை இங்கு தருகிறோம்.**

யாழ். நகரை மையமாகக் கொண்டு இயங்குகின்ற பத்திரிகையான 'உதயன்' பத்திரிகைக் காரியாலயத்திற்குள் கடந்த 2ஆம் திகதி இரவு அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத குழுவினர் அங்கிருந்த சந்தைப்படுத்தல் முகாமையாளர் மற்றும் விநியோக மேற்பார்வையாளர் ஆகியோரைச் சுட்டுக்கொன்றுவிட்டு விநியோகப் பகுதியிலிருந்த மூவரைக் கடுமையாகத் தாக்கிவிட்டுத் தப்பியோடிய செயலை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

குறிப்பாக நாங்கள் கௌரவமாகப் போற்றும் பத்திரிகைச் சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றிற்கு எதிரான செயற்பாடே இதுவாகும். மனித நேயத்தோடு பார்க்கும்போது இது முழுமையாக மிருகங்களின் செயற்பாடாகவே காணப்படுகின்றது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார் என்று இதுவரை தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. எது எவ்வா றிருப்பினும் , யார் செய்தாலும், இது திட்டமிட்டுக் குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் செய்யப்பட்ட செயலாகவே தெரிகிறது.

இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமைக்குக் காரணம் என்ன? நேற்று இதை எழுதும்வரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

'உதயன்' பத்திரிகைக்கு எதிரானவர்களின் செயற்பாடாகவும் இருக்கலாம் அல்லது பத்திரிகை மட்டுமன்றி அங்கு தொழில்புரியும் ஊடகவியலாளன் அல்லது ஊடகவியலாளர்கள் குழு அல்லது அங்கு எழுதப்படும் கட்டுரைகளுக்கு எதிரானவர்களின் செயற்பாடாகவே இருக்கவேண்டும்.

அங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் தாக்குதலைப் பார்க்கும்போது அது ஒரு தனிப்பட்ட குழுவின் செயற்பாடாகவே தெரிகிறது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். இங்கு வெவ்வேறு இன, மத, மொழிகளைக் கொண்டவர்கள் வாழ்கின்றனர். தமது மனசாட்சிப்படி செயலாற்றுவதற்கும் கருத்துகளை வெளியிடுவதற்கும் அனைத்துப் பிரஜைகளுக்கும் உரிமையும், சுதந்திரமும் உள்ள நாடாகும். அரசியல் யாப்பில் பிரதானமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது பத்திரிகைச் சுதந்திரத்திற்கு அனைவருக்கும் உரிமையுண்டு என்பதே.

'உதயன்' பத்திரிகை யாழ். நகரிலிருந்து வெளிவருவதும் இவ்வுரிமையின் அடிப்படையில்தான். பத்திரிகை, பத்திரிகை நிறுவனம், பத்திரிகையாளர்கள் மற்றும் அதன் ஊழியர்களும் இவ்வுரிமையைச் சந்தோஷமாக அனுபவித்ததற்குக் காரணம் ஜனநாயக உலகில் வெகு உயர்வாக மதிக்கப்பட்ட பத்திரிகைச் சுதந்திரமே.

உண்மையிலேயே இத்தாக்குதலானது பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிரான கொடூரச் செயலாகும். நாங்கள் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதற்குக் காரணமும் இதுவேயாகும்.

மொழிச்சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகியன அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவற்றை அனுபவிப்பதற்கு இடமளிப்பது அனைவரதும் கடமையாகும்.

ஆனாலும், இவ்வாறான விடயங்களைக் கருத்திற்கொள்ளாத காடையர்கள் இருக்கும்வரை, இவ்வாறான உரிமைகள் பறிக்கப்படும். இவ்வாறான அசம்பாவிதங்களைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

'உதயன்' பத்திரிகையோ அல்லது அங்குள்ள ஊடகவியலாளரினாலோ ஊடகச்சுதந்திரம் அல் லது ஊடகப் பண்புகளைச் சீர் குலைக்கும் வகையில் செயற்பட்டி ருந்தால் நாட்டின் நடைமுறையில் உள்ள சட்டத்தின் ஊடாக அதற் கெதிராக எவரும் செயற்பட முடி யும். ரி. 56 ரகத் துப்பாக்கியைக் கொண்டு தாறுமாறாக சுடத் தேவை யில்லை

அப்படி ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொலை செய்வது தீவிரவாத செயலாகும். ஜனநாயகத்தை கௌரவமாக மதிக்கும் பிரஜையோ அல்லது குழுக்களோ இவ்வாறான ஈனச்செயலை செய்வது என்பது வேதனைக்குரியதாகும். இது நேரடியாகவே தீவிரவாத செயலாகும்.

இப்பத்திரிகை நிறுவனத்திற்குள் அத்துமீறி நுழைந்து வெறித்தனமாகச் சுடப்பட்ட சம்பவமானது உலக பத்திரிகைச் சுதந்திர தினம், 'யுனஸ்கோ' நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய மாநாடு கொழும்பில் கொண்டாடப்பட்டிருக்கும் வேளையிலேயே இடம் பெற்றி ருக்கின்றது.

இவ்வாறான ஈனச்செயல்களை, நாட்டில் முக்கிய நிகழ்வுகள் இடம் பெறும் வேளையில் மேற்கொள்வது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவே ஆகும்.

இவ்வாறான யோசனை ஒருவருக்கு வருமாயின் அதற்கு ஆச்சரியப்படத் தேவையில்லை. காடையர்களின் பழக்கமும் அதுதான். இவ்வாறான நிகழ்வுகள் ஒன்று, இரண்டல்ல இங்கு ஏராளமாக நடைபெற்றுள்ளன.

பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிரான தாக்குதல் என்பதால், இச் சம்பவம் கொடூரமானது. பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினர் உடனடியாக இதுபற்றி விசாரணைகள் நடத்தி சம்பந்தப்பட்ட கொலையாளிகளைக் கைதுசெய்து தண்டனை வழங்கி, ஏனையவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நாங்கள் இதைக் கண்டிப்பாகச் சொல்வதற்குக் காரணம் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறுவது இது முதல்தடவையல்ல. அத்துடன் இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் வெளியில் சுதந்திரமாகச் சுற்றித்திரிவதனாலேயே ஆகும்

மேலும் இவர்களினால் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு மேலும் ஆபத்தே ஏற்படும் (க)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ர.கிருஷ்ணானந்த சர்மா அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி லக்ஷ்மியம்மாள் ஸ்ரீபதி சர்மா**

அவர்களின் திடீர் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(அ/49195)(22)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு சின்னத்துரை

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சின்னத்துரை அவர்கள் 02.05.2006 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு வள்ளியம்மை தம்பதியின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, அன்னம்மா ஆகியோரின் சகோதரனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் மோகனதாசன், குமாரதாசன், சிவதாசன், யோகதாசன், குகதாசன் தேவதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலைவாணி சிவதாசன், பிரமிளா யோகதாசன், தெய்வரூபி தேவதாசன் ஆகியோரின் அருமை மாமனாரும் நிலா, அஜிதா, சுகிர்தா, சுவேதா, சிவரம்யன், சிவப்பிரியா, சிவானுஜன் ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்பு விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு
T.P.077 3618469

(50007)(22)

தகவல்:
சி.மோகனதாசன்
(மகன்)

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும்
கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜாக்சனின்

**கிங் - கொங் King Kong**

தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த

**அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது**

10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

## நாகம்ஸ் சுன்னாகம்

எஸ்.ஜே.சூரியா, நயன்தாரா
மற்றும் பலர் நடித்த

[illegible]

காட்சி நேரம் : 10.30, 2.30, 5.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தில் முறைகேடு இருப்பின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே5

குடாநாட்டில் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முறைகேடாகச் செயற்பட்டால் அவற்றுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மீன்பிடி, விவசாய நடவடிக்கைகளுக்கு மட்டும் ஒரு லீற்றர் எரிபொருளை கொள்கலன்களில் (கான்களில்) வ்ழங்க முடியும். ஏனையோருக்கு வாகனங்களுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகிக்கவேண்டும்.

எக்காரணம் கொண்டும் வாகனங்களில் வருபவர்களுக்கு 'கான்'களில் எரிபொருளை வழங்கக் கூடாது. அத்துடன் வரிசைக் கிரம அடிப்படையில் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்படவேண்டும்.

எரிபொருள் விநியோகத்தில் முறைகேடுகளைச் செய்யும் எரிபொருள் நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார் அரச அதிபர். (ஐ)(22)

# கண்காணிப்பு குழுவுக்கு இளம்பரிதி கடிதம்

பளை,மே5

நெல்லியடிப் பகுதியில் ஓட்டோக்களில் சென்ற ஏழுபேர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளார்.

இத்தகைய சம்பவங்களால் வரும் விளவுகளுக்கு சிறிலங்கா அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும் என்று இளம்பரிதி அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மருதனார்மடம் தாக்குதலில் 2 படையினர் உயிரிழப்பு!

## இராணுவத்தின் சூட்டில் பொதுமகன் பலி!

யாழ்ப்பாணம், மே 05

மருதனார்மடத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்தனர். அவர்களில் இருவர் இராணுவத்தினர். மற்றையவர் பொதுமகன்.

வீதிப் பாதுகாப்புக் கடமையில் இருந்த படையினர் மீது இனந்தெரியாத நபர்கள் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர்களில் இருவர் உயிரிழந்தனர் என்று பொலீஸிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து படையினர் நடத்திய பதில் துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் உயிரிழந்தார் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இணுவிலுக்கும் மருதனார்மடத்திற்கும் இடைப்பட்ட கே.கே.எஸ். வீதியில் இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கே.கே.எஸ். வீதியில் இணுவில் முதல் சுன்னாகம் வரையான பகுதியைப் படையினர் போக்குவரத்திற்குத் தடை செய்திருந்தனர்.

நேற்றுக் காலை மருதனார்மடம் சந்தைக்கு வந்திருந்தவர்கள் இந்தச் சம்பவத்தால் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. ஆத்திரமேலீட்டால் இராணுவத்தினர் பொதுமக்களைக் கண்டபடி தாக்கினர் என்றும் கூறப்பட்டது. (ம)

# இருபாலையில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்,மே5

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவிலருகே நேற்றுப் பிற்பகல் 5.30 மணி யவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது 'கிரனேட்' வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை -

பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் பிற்பகல் 2 மணியுளவில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இச்சம்பவங்களின் சேதவிவரங்கள் தெரியவில்லை. (22)

## உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்சி)

தேசியத் தலைவர் அரசியல்துறையினருக்குப் பணித்திருக்கிறார் என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

'உதயன்' நிறுவனம் ஊடாக இந்த உதவு தொகையை சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தினரிடம் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)(22)

# அமைதிப் பேச்சு இம்மாதம் 15ஆம் திகதி?

கொழும்பு, மே 05

" இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஜெனிவாப் பேச்சு பெரும்பாலும் இம்மாதம் 15ஆம் திகதி நடைபெறலாம் என உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், பேச்சை வெகுவிரைவில் ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டே வருகிறது"

- இவ்வாறு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்றுக் கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே கூறினார்.

# ஊழியர் இருவருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

சார்ந்தவர்களும் அப்போது வருகை தந்து தங்கள் இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

சந்தைப்படுத்தல் முகாமையாளர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ், விநியோகப் பகுதி ஊழியர் இராசரட்ணம் ரஞ்சித் ஆகிய இருவரது பூதவுடல்களும் வைக்கப்பட்ட பேழைகள் 'உதயன்' அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டு ஒன்றாக அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

உயிரிழந்த இருவரதும் உறவினர்களும் உடன் வந்திருந்தனர்.

'உதயன்' விளம்பரப் பகுதி முகாமையாளர் தலைமையில் மலரஞ்சலியும் நினைவுரைகளும் இடம்பெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் என்.சரவணபவன், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் ந.பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் எஸ்.சிவசுப்பிரமணியம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ரவீந்திரன் மற்றும் றோட்டறக்ட் கழகங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் தமது அஞ்சலி உரையாற்றினர்.

'உதயன்-சஞ்சீவி' ஆசிரிய பீடத்தவர்கள், பணியாளர்கள், சக நிறுவனங்களின் ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

பின்னர் சந்தைப்படுத்தல் முகாமையாளரின் பூதவுடல், யாழ்.சிவகுருநாதர் ஒழுங்கையில் அவர் வசித்த இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு தொடர்ந்தும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

விநியோகப் பகுதி ஊழியர் இ.ரஞ்சித்குமாரின் பூதவுடல், நாவற்குழி 5 வீட்டுத் திட்டத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. நேற்று மாலை 3.00 மணியளவில் அவரது இறுதிச் சடங்குகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

(ம-190)

# முச்சக்கர வண்டிகள்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

முதல் ஓட்டோவில் இருந்து படையினரை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து படையினர் அந்த இரு ஓட்டோக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் 7 பேர் உயிரிழந்தனர்.

"படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது ஓட்டோக்களுக்குள் இருந்த இரு கிரனேட்டுக்கள் வெடித்தன." - என்றார் பிரசாத் சமரசிங்க.

இதேவேளை, நெல்லியடியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகம் (ஈ.பி.டி.பி.)மற்றும் பொலீஸ் நிலையம் என்பன அமைந்துள்ள பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. இதில் படையினர் மூவர் காயமடைந்தனர் என்று கூறப்படுகின்றது.

அவர்கள் மூவரும் பருத்தித்துறைப் படைமுகாமில் இருந்து, சிகிச்சைக்காக ஹெலி மூலம் பலாலி இராணுவ ம்ருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர் என்று தெரிகின்றது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் அந்தப் பகுதியைக் கடந்து பருத்தித் துறை வீதியால் நவிண்டில் பகுதி நோக்கி வந்துகொண்டிருந்த ஓட்டோக்கள் இரண்டு, நவிண்டில் தோட்டவெளியில் அமைந்துள்ள படைமுகாமிற்கு அருகே ஒழுங்கை ஒன்றினுள் திரும்பியவேளை அவற்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக் கப்பட்டது.

கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் ஏழு பேரே இந்த அனர்த்தத்தில் உயிரிழந்திருக்கின்றனர்.

உயிரிழந்தவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

மணியம் சுபாஸ் (வயது 21), நவரத்தினராசா நாசன்னா(வயது 19), பாலச்சந்திரன் கிரிதரன்(வயது 18), நாகரத்தினம் நகுலேஸ்வரன்(வயது 18), தாமோதம்பிள்ளை மஞ்சி, செல்வராசா சுமன்(வயது 21), கேகிலாஅம்மன் சின்னமணி(வ்யது 21).

கொல்லப்பட்வர்களின் உடல்களில் பல சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. பருத்தித்துறை நீதிவான் அரிநாயகம் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டபின் சடலங்களைப் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்குமாறு உத்தரவிட்டார்.

தாக்குதலுக்கு இலக்கான இரு ஓட்டோக்களும் தடம்புரண்டு சேதமடைந்த நிலையில் காணப்பட்டன.

இவர்கள் பருத்தித் துறை இறங்குதுறைப் பகுதியில் இருந்து திரும்பிக்கொண்டிருந்தனர் என்று ஒரு தகவலும் திருமண வீடொன்றுக்குச் சென்றுவிட்டு அந்த வழியில் வந்துகொண்டிருந்தனர் என்றும் இரு வேறு தகவல்கள் தெரிவித்தன.

(ஐ-ம-70-173)

# கிளிநொச்சியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் முன்பாகக் கூடிய ஊடகவியலாளர்களும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கிளிநொச்சி அரச அதிபரிடம் பேரணியாகச் சென்றனர். இலங்கை ஜனாதிபதிக்கும் ஊடகத்துறை அமைச்சருக்கும் முகவரியிடப்பட்ட மகஜர்களை அரச அதிபரிடம் கையளித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் மையத்தின் தலைவர் து.ராதேயன் இந்த மகஜர்களைக் கையளித்தார்.

அதன் பின்னர் அங்கிருந்து ஐ.நாவின் வதிவிடப்பிரதிநிதி அலுவலகம் நோக்கி அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். ஊடகவியலாளர்களைப் பாதுகாக்குமாறு கோரி ஐ.நா. செயலருக்கு எழுதப்பட்ட மகஜர் வதிவிடப் பிரதிநிதி பெனி புறூனிடம் கையளிக்கப்பட்டது. அதனை உரிய இடத்திற்கு அனுப்பி வைப்பதாக அவர் உறுதியளித்தார்.

இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கலந்துகொண்டார். "ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், எமது தாயகப் பிரதேசத்தின் உண்மைத் தன்மைகள வெளி உலகத்திற்குச் சொல்வதைத் தடுக்கும் நோக்கம் கொண்டவை." - என்று அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்காப் படையினர் தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமித்து நிற்கும் வரையும் பேச்சு நடத்தமுடியாது என்றும் அவர் அங்குவைத்துக் கூறினார்.

(ம-352-405-415-353-305- 301)

# உதயன் படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்சி)

நொறுக்கியும் பெரும் அட்டகாசம் புரிந்தனர்.

இந்தக் கொடூரச் செயலுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் நேற்றைய தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இந்த அழைப்புக்கு குடாநாட்டு மக்கள் தங்கள் முழு ஆதரவை வழங்கி அமைதியான முறையில் எதிர்ப்பை ஒருமித்து வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்கள் எங்கும் ஹர்த்தால் நேற்று முழு அளவில் அனுஷ்டிக்கப்பட்டதாக பிரதேச செய்தியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

யாழ். நகரப் பகுதியும் வர்த்தக நிலையங்கள், வங்கிகள், அலுவலகங்கள் இழுத்து மூடப்பட்டு வெறிச்சோடிக் காணப்பட்டது. ஏனைய முக்கிய நகரப் பகுதிகளிலும் நேற்று வங்கிகள், அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

போக்குவரத்துச் சபை பஸ்சேவை உட்பட பொதுப் போக்குவரத்து சேவைகள் எவையும் இடம்பெறவில்லை. முகமாலைக்கான பஸ் சேவைகளும் நிறுத்தப்பட்டதால் ஏ-9 வீதியூடான போக்குவரத்துகளும் மந்தம் அடைந்தன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் வராததால் அவை நேரகாலத்துடன் மூடப்பட்டன. தேநீர் கடைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் மட்டும் திறந்திருந்தன.

(ஐ-ம-70-111-190-175-135-117-11-15)


எம்முடன் இணைவோர் உயர் கல்வி பெறுவது நிச்சம்

விக்னா கல்வி நிறுவனம்

A/L 2008

கலைல் வர்த்தக வகுப்புகள் பிரிவு II

ஆரம்பம்:06.05.2006 8.00

| | | | |
|---|---|---|---|
| ACC. | திரு. பாலவாசன் | ECO. | திரு. ஜதீரன் |
| B.ST. | திரு.முரளி பிரிவு (II) | B.ST. | திரு.யசோ பிரிவு (I) |
| LOG. | திரு.சயந்தன் | TAM. | திரு.குழந்தை |
| HIC. | திரு.பத்மராஜா | GEO. | திரு.பாபு |
| HIN. | திரு. தரன் | HIST. | திரு. பத்மன் |
| PLSCI. | திரு.ஸ்ரீரங்கநாத் | CHI. | திரு.வசந்தன் |
| DRAMA. | திரு.ரமேஷ் | | |

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

C.C.A. சுன்னாகம்.

2008 A/L கலை, வர்த்தகம் புதிய பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | - பத்மநாதன் |
| அளவையியல் | - சயந்தன் |
| இ.நாகரிகம் | - சுரேஸ் |
| புவியியல் | - பாபு |
| நாடகம் | - றமேஸ் |
| அரசியல் | - திருமுருகன் |
| கிறிஸ்தவம் | - வசந்தன் |
| பொருளியல் | - ஸ்ரீ |
| வணிகம் | - முரளி |
| கணக்கீடு | - சசிரூபன் |

D.C.M

மருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

A/L 2008

மாலை நேர வகுப்பு

பொருளியல்: வரதராஜன்

கணக்கீடு: பாலவாசன்

வணிகக் கல்வி :உமாகாந்த்

ஆரம்பம்

08 - 05 - 06

திங்கள் மாலை 4.00 மணி

நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

A/L 2008 பிரிவு-2

ஆரம்பம் : 06.05.2006

சனி 3.00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | கணக்கீடு | வணிகக் கல்வி |
| கஜீதரன் | P.P.ரதன் | தாஸ் |
| தமிழ் | இ.நாரிகம் | அளவையியல் |
| கீர்த்திராஜன் | ஜெயக்குமார் | கமல் |
| புவியியல் | நாடஅரங்கியல் | அரசியல் |
| இக்னேசியஸ் | மயூரன் | றொபின்சன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.